# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
### IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.29/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா. 2 |
| Name | : | ராஜேந்திரன் |
| Father’s Name | : . | |
| Village | : . | |
| Taluk | : . | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : . | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the 18.07.2025.

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 எனது மகன். ஆஜர் எதிரி எங்கள் பங்காளி உறவுமுறை ஆவார். சுமார் 5, 6 வருடங்களுக்கு

முன்பு தேதி ஞாபகம் இல்லை. ஒருநாள் மாலை 5.00 மணிக்கு நான் கிணற்று வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தேன். அப்போது அ.சா.1 கழனி வேலைக்கு சென்றிருந்தார். எனது மகன் கழனியில் இருந்து வரவில்லை என்று நான் கழனியில் சென்று பார்த்தேன். ஆஜர் எதிரி எனது மகனை அடித்து எனது மகனுக்கு ரத்தம் வழிந்துக்கொண்டிருந்தது நான் அதை கேட்டேன். ஆஜர் எதிரி என்னை அசிங்க அசிங்கமாக பேசினார். என்னை தடியால் தாக்கினார் அதனால் எனக்கு இடுப்பின் மேற்பகுதியில் காயம் ஏற்பட்டது. அதனால் வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தேன். அங்கிருந்து செங்கல்பட்டு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எதிரியும் நானும் ஒரே ஊர்காரர்கள் என்றால் சரிதான். இருவருக்கும் ஒரே பாக கிணறுதான் என்றால் சரிதான். அதன் மூலமாகதான் இருவரும் பயிர் செய்து வந்தோம் என்றால் சரிதான். எதிரியின் இடத்தில்தான் எதிரி கிணறு வெட்டியுள்ளார் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது 6.00 மணியிருக்கும் என்றால் சரிதான். நான் சம்பவ இடம் சென்றபோது எதிரியின் கிணற்றில் போர் போட்டுக்கொண்டு இருந்தார்கள். அப்போது எனது மகன் சம்பவ இடத்தில் இருந்தாரா என்றால் அங்குதான் அடிப்பட்டு கீழே மயக்கமாகி கிடந்தார். எனது மகன் நான் செல்லும்வரை மயக்கமாகதான் இருந்தார். நான் சென்று எதிரியிடம் சண்டைபோட்டேனா என்றால் சண்டைபோடவில்லை எனது மகனை எதிரி அடித்ததை நான் பார்க்கவில்லை. எதிரி என்னை எதனால் அடித்தார் என்றால் தடியால் அடித்தார். எதிரி என்னலை அடிக்க பயன்படுத்தி தடியை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை. நான் சம்பவத்திற்கு பிறகு நேராக மருத்துவமனைக்கு சென்றவிட்டேன். எனக்கு குடிபழக்கம் உண்டா என்றால் உண்டு. சம்பவ சமயத்தில் நான் மது அருந்தியிருந்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் பொதுமக்கள் யாரும் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. என்னையும் எனது மகனையும் யார் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் என்றால் எனது மனைவி அழைத்துச்சென்றார். சண்டையை யாரேனும் விலக்கிவிட்டார்களா என்றால் யாரும் விலக்கிவிடவில்லை. எனது மனைவிக்கு யார் தகவல் சொல்லி சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் அவராகவே வந்தார். வந்தவாசி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் ஒருமணி நேரம் இருக்கும். நான் மருத்துவரிடம் எனக்கு எலும்பு முறிந்துவிட்டதாக சொன்னேனா என்றால் எனக்கு எலும்பு வலிப்பதாக சொன்னேன். எதிரிக்கும் எனக்கும் இருந்த முன்விரோத்தினால் என் மகன் கொடுத்த பொய்யான புகாருக்கு நான் ஆதரவாக பொய்சாட்சியம அளிக்கிறேன என்று சொன்னால சரியல்ல. எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தால் செங்கல்பட்டு மருத்துவமனையில் அதற்குரிய மருத்துவ சிகிச்சையை செய்திருப்பார்கள் என்றாலும் எலும்புமுறிவு ஏற்படாததால்தான் அதற்கான சிகிச்சை ஏதும் அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டது

கொடுங்காயம் இல்லை சொற்பகாயம்தான் என்றால் சரியல்ல. எனக்கு இருக்கும் மது பழக்கத்தினால் மதுபோதையில் சென்று தானாகவே கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**